# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**ஆணை நாள் 08.04.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 371/B/2024 (SA 4182/B/2023)**

திரு. R. ஜெயபால் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
பிரிவு அலுவலர்,
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில்,
சென்னை உயர்நீதிமன்ற வளாகம்,
சென்னை-104. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் (08.04.2026) இன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணைக்கு மனுதாரர் திரு.R.ஜெயபால் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.S.சுப்பிரமணியன், பொது தகவல் அலுவலர் (பொறுப்பு), பிரிவு அலுவலர், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில், சென்னை உயர்நீதிமன்ற வளாகம், சென்னை அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 06.03.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)-ன்கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் 05.06.2024 அன்று தாக்கல் செய்த ஆணை நிறைவேற்றப்படாமை மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு (08.04.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மனுவானது மனுதாரர் 02.01.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனுவாகும்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் பொது அதிகார அமைப்பால் போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்து, அதனை பெற்றுத் தரும்படி ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு 09.02.2023 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார். இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் பார்க்கும்பொழுது பொது அதிகார அமைப்பால் மனுதாரருக்கு

வழங்கப்பட்ட தகவல் போதுமான தகவலாக கருதி, இந்த மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 371/B/2024 (SA 4182/B/2023)</u>**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   பிரிவு அலுவலர்,
   தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில்,
   சென்னை உயர்நீதிமன்ற வளாகம்,
   சென்னை-104.

2. மேல்முறையீட்டாளர்,
   திரு. R. ஜெயபால்,
   எண்.1-சி-2, சுப்பையா முதலியார்புரம் 1-ஆவது தெரு,
   திருச்செந்தூர் ரோடு,
   தூத்துக்குடி-628003.
   செல்.9443204354.

Copy to: File. GP PC
08.04.26

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005